**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 380/2025**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாடசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராஜா | தொழில் | : | இளநீர் வியாபாரம் |
| கிராமம் | : | கடையாலுருட்டி | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 25th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடையாலுருட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் இளநீர் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 24 ம் தேதி, 2017 ம் வருடம் மாதம் ஞாபகமில்லை. ஏற்கனவே எதிரி சேர்மனுக்கும், மனைவி ருக்மணிக்கும் கொடுத்த ரூ.30,000/-ஐ நான் அவர்களுடைய வீட்டின் வெளியே வைத்து கேட்டேன். அவர்கள் சாயங்காலம் பதில் சொல்கிறேன் என்று சொன்னார்கள். அன்றைக்கு சாயங்காலம் 07.00 மணியளவில் நான் பால் வாங்குவதற்கு இருசக்கரவாகனத்தில் என் வீட்டிலிருந்து வடக்கு பார்த்து சென்று கொண்டிருந்தேன். என் வீட்டு வாசலில் இருந்து 10 அடி தூரத்தில் எதிரிகள் அங்கு வந்தார்கள்.

எதிரி மாரியப்பன் கட்டையால் என்னுடைய வலது கையில் அடித்து கை முறிந்தது. ரவி தலையில் அடித்து கீழே தள்ளினார். சேர்மன் என்ன பொருளால் அடித்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. எனது வண்டியை எதிரிகள் 3 பேரும் அடித்து உடைத்தார்கள். எதிரிகள் என்னை

அடித்தபோது, பணம் தரமுடியாது, கொன்று விடுவேன் என்று சொல்லி அடித்தார்கள். என்னுடைய மனைவியும், அப்பாவும் சத்தம் போட்டார்கள். எதிரிகள் ஓடி விட்டார்கள். சேர்ந்தமரம் அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் சிகிச்சைக்காக சென்றேன். பின்னர், தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலத்தை தென்காசி அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் அறிவேன் சாட்சியாக என்னுடைய மனைவி கையெழுத்து செய்தார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னுடைய வண்டிக்கு சேதாரம் ரூ.50,000/- ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.26 12:11:12 +0530

<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 380/2025**</u>

<u>**வழக்கு சாட்சி PW-2**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சத்யா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமசாமி | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | கடையாலுருட்டி | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 25th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் கடையாலுருட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்பு வகித்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 மாடசாமி என்னுடைய கணவர். 24.02.2017 ம் ஆண்டு அன்றைய தினம் சிவராத்திரி ஆகும். என் கணவர் ருக்மணி என்பவருக்கு ரூ.30,000/- ஏற்கனவே கொடுத்திருந்தார். அதை அன்றைய தினம் காலையில் ருக்மணியின் கணவரிடம் கேட்டதற்கு பணத்தை கொடுக்க முடியாது என்று பிரச்சனை செய்துள்ளார். அன்றைய தினம் மாலை 07.00 மணிக்கு எனது கணவர் பூ வாங்குவதற்காக இருசக்கரவாகனத்தில் எங்களது வீட்டிலிருந்து கிளம்பி சிறிது தூரம் சென்றவுடனேயே எதிரிகள் மூவரும் எனது கணவரை மறித்து எப்படி எங்களிடம் ரூபாய் கேட்பாய், என்று வாக்குவாதம் செய்தார்கள். சத்தம் கேட்டு நான் சென்றேன்.

அப்போது, எதிரி மாரியப்பன் கட்டையால் கையிலும், ரவி கட்டையால் தலையிலும் அடித்தார். எதிரிகள் 3 பேரும் சேர்ந்து என் கணவரின்

வண்டியை அடித்து நொறுக்கினார்கள். நானும், எனது அத்தை, மாமனார், நாத்தனார் ஆகியோர் சத்தம் போடவே எதிரிகள் என் கணவரை பார்த்து மிரட்டி விட்டு சென்று விட்டார்கள். நானும், எனது கொழுந்தனும் ஆட்டோவில் எனது கணவரை சேர்ந்தமரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். காயம் அதிகமாக இருந்ததினால் தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல கூறியதினால், தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். 25.02.2017 ம் தேதி போலீசார் வந்தபோது, எனது கணவர் பேசமுடியாத நிலையில் இருந்ததினால் மறுநாள் 26.02.2017 அன்று எனது கணவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். நான் அருகில் தான் இருந்தேன். என் கணவரின் வண்டியின் சேத மதிப்பு ரூ.5000/– ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.26 12:11:18 +0530